Judicial Form No. 53.
(See Rule 42)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, CR.P.C.)

**IN THE COURT OF VIII METROPOLITAN MAGISTRATE, CHENNAI.**

**CC. No. 1270 of 2022**

Deposition of திருமதி.வித்யா

Witness for Complainant PW 2

| | | |
|---|---|---|
| Name | – | திருமதி.வித்யா |
| Father's Name | – | |
| Village | – | |
| Taluk | – | |
| Caste | – | |
| Calling | – | |
| Religion | – | |
| Age | – | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969

(Central Act 44 of 1969) on the 9th day of November 2022

Signature of witness.

Name of the Bench Clerk : **Tmt. Sarala**

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969.

(Central Act 44 1969 on the 9th day of November 2022

Signature of Bench Clerk

**முதல் விசாரணை** – நான் தற்போது சி–3 ஏழுகிணறு காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவின் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015ம் வரும் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்த குமார் பணிமாறுதலில் சென்றதனால் வழக்கின் தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 28.01.2015ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் குமார் நிலைய அலுவலில் இருந்த போது காலை 11.00 மணிக்கு ராஜேஸ்வரி, பெ/வ. 50 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினைப் பெற்று சி.எஸ்.ஆர். 57/2015 வழங்கப்பட்டது

பின்னர் முதல் கட்ட விசாரணை முடித்து 02.02.2015 ம் தேதி நிலைய குற்ற எண். 267/2015 இதச பிரிவுகள் 294(பி), 323 மற்றும் பிரிவு 3 TNPPDL ன் கீழ் முதல் தகவலறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த புகார் அதசாஆ.2 ஆகும். முதல் தகவல் அறிக்கை அதசாஆ.3 ஆகும். பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் ஆதிமூலம் பார்வைக்கு வைத்துள்ளார். பின்னர் காவல் ஆய்வாளர் அன்றைய தினமே 13 மணிக்கு சம்பவயிடமான உட்வார்பு 2 வது கேட் தெரு, தேவி கருமாரியம்மன் ஆலயம் அருகில் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் மேரி மற்றும் ரேவதி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் அதாசாஆ 4 ஆகும், மாதிரிவரைபடம் அதசாஆ.5 ஆகும். பட்டியல் சாட்சிகள் 1 முல் 6 வரை உள்ளவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரியை தேடி வந்த நிலையில் உயர் நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்ற காரணத்தினால் கைது செய்யப்படவில்லை. பின்னர் காவல் ஆய்வாளர் ஆதிமூலம் பணி மாறுதலில் சென்றதினால் அவருக்கு பின் பணிக்கு வந்த காவல் ஆய்வாளர் உக்கிர பாண்டியன் வழக்குகோப்பினை விசாரணைக்காக எடுத்துக் கொண்டார். பின்னர் இறுதி கட்ட விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323 மற்றும் பிரிவு 3 TNPPDL இருந்து பிரிவு மாற்றம் செய்து 294(பி), 352, 427 ன் கீழ் சட்டப்பிரிவு மாற்றலறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாற்றலறிக்கை அதசாஆ.6 ஆகும். பின்னர் 07.03.2019 ம் தேதி இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை** – இந்த வழக்கை நான் நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். வழக்கை சரிவர விசாரிக்காமல் எதிரி மீது பொய்யாக புனையப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் தொடர்பு இலலை என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன வகையில் கைது செய்யவில்லை என்றாலும் விசாரணை என்ற பெயரில்அவரை அழைத்து பொய்யாக புனையப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.